பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
03 12 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அரசுத் திட்டங்களில் தடைகள் அகற்றப்பட்டு அவை உரிய நேரத்தில் நிறைவு செய்யப்படுவதை பிரகதி தளம் உறுதி செய்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- தமிழகத்தில் 15 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் புயல், மழையால் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்ய இடைக்கால நிவாரணமாக 2 ஆயிரம் கோடி ரூபாயை விடுவிக்க வேண்டுமென மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.
- வடசென்னை பகுதி வளர்ச்சிக்காக 6 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

-----இனி விரிவான செய்திகள்-----

<<<<>>>>

அரசுத் திட்டங்களில் தடைகள் அகற்றப்பட்டு அவை உரிய நேரத்தில் நிறைவு செய்யப்படுவதை பிரகதி தளம் உறுதி செய்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பத்தையும், நிர்வாகத்தையும் பிரகதி இணைத்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

ஆக்ஸ்ஃபோர்டு வணிகப் பள்ளி மற்றும் கேட்ஸ் வணிகப் பள்ளியின் ஆய்வில் பிரகதி தளத்தின் செயல்திறன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, பெருமை அளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடைகள் அகற்றப்பட்டு திட்டங்கள் சரியான நேரத்தில் நிறைவு செய்யப்படுவதை பிரகதி தளம் உறுதி செய்வதாக அவர் கூறியுள்ளார்.

இது நீண்டகால பலன்களை வழங்கி மக்களுக்குப் பெரிதும் பயனளிப்பதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் பரவலாக இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, திருச்சி, பெரம்பலூர், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே மழை பாதிப்பு காரணமாக கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சேலம், ராணிப்பேட்டை, நீலகிரி மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி வருவாய் வட்டாரங்களில் உள்ள பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை விடப்படுவதாக மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோயிலூர் நகராட்சிக்கு உட்பட்ட பள்ளிகளுக்கு இன்று விடுமுறை விடப்படுவதாக அட்மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

இதனிடையே ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களின் பல இடங்களில் நள்ளிரவில் கனமழை பெய்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்டங்களைச் சேர்ந்த மின் நுகர்வோர் அபராதம் இன்றி மின் கட்டணம் செலுத்துவதற்கான காலக்கெடு இம்மாதம் 10ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக மின்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் புயல், மழையால் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்ய இடைக்கால நிவாரணமாக 2 ஆயிரம் கோடி ரூபாயை விடுவிக்க வேண்டுமென மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் ஃபெஞ்சல் புயலால் தமிழகத்தின் 14 மாவட்டங்களில் பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேரிடரால் 69 லட்சம் குடும்பங்களும், ஒன்றரை கோடி மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு லட்சம் ஹெக்டேர் பரப்பிலான பயிர்கள் மூழ்கியிருப்பதுடன் 9 ஆயிரத்து 500 கிலோ மீட்டர் நீள சாலைகள் சேதமடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நெருக்கடியில் இருந்து தமிழகம் மீள மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்று நம்புவதாக திரு. மு.க. ஸ்டாலின் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருவண்ணாமலையில் மண்சரிவில் சிக்கி உயிரிழந்த 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மற்ற மூவரையும் மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மழை வெள்ள பாதிப்புகளை தடுக்க தமிழக அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டதாக கூறப்பட்ட நிலையில், சென்னை நகரம் வெள்ளத்தில் மிதக்கும் சூழல் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம், தருமபுரி மாவட்டங்களில் கனமழையால் ஒவ்வொரு ஆண்டும் பயிர்கள் சேதமடைவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை, சேலம், கிருஷ்ணகிரி, கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களிலும் மழை வெள்ளத்தால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததே இதற்கு காரணம் என்றும், இதைத் தடுக்க இனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வடசென்னை பகுதி வளர்ச்சிக்காக 6 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும தலைவரும், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு. சேகர் பாபு கூறியுள்ளார்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடங்கள் மற்றும் கிளை நூலகங்களை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

வடசென்னை பகுதியில் 15க்கும் மேற்பட்ட கிளை நூலகங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான பணிகள் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என்று திரு. சேகர்பாபு தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் சுகாதாரத்துறையில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு வெளிப்படையான கலந்தாய்வின் மூலம் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த செவிலியர்களுக்கு பணிநியமன ஆணைகளை அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தின் அரசு மருத்துவமனைகளில் அதிநவீன வசதிகள் உள்ளதாக தெரிவித்தார்.

இதயம் காப்போம் திட்டத்தின்கழ் உயிர்காக்கும் முக்கிய மருந்துகள் எந்நேரமும் கையிருப்பில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் 2 ஆயிரத்து 246 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்புக்கடி மற்றும் நாய் கடிக்கான மருந்துகள் உள்ளதாக திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் தர்காவின் கந்தூரி விழா கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது.

இதில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

கினியா நாட்டில் கால்பந்து மைதானத்தில் ஏற்பட்ட மோதல் மற்றும் நெரிசல் காரணமாக 50-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

<<<<>>>>

'தி சபர்மதி ரிப்போர்ட்' திரைப்படத்தை தில்லியில் தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பார்த்த பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்தப் படக் குழுவினரின் முயற்சியைப் பாராட்டுவதாகக் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் வனப்பரப்பு 2017-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021-ஆம் ஆண்டில் 7 ஆயிரத்து 449 சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அசாம் மற்றும் நாகாலாந்து மாநில தினங்களை ஒட்டி சென்னையில் ஆளுநர் மாளிகையில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தலைமையில் இரு மாநில கலைஞர்கள் பங்கேற்ற கலாச்சார நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன.

<<<<>>>>

தமிழகத்தில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட சட்டத்துறை தன்னார்வப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்கான நியமன ஆணைகளை மாநில சட்ட அமைச்சர் திரு. ரகுபதி வழங்கினார்.

<<<<>>>>

மாற்றுத்திறனாளிகளுக்கான அரசின் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு வாகனத்தை, காஞ்சிபுரத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

ராமநாதபுரத்தில் எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை மாவட்ட ஆட்சியர் திரு சிம்ரன்ஜித் சிங் காலோன் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

கனமழை காரணமாக சென்னையில் மூடப்பட்டிருந்த 871 பூங்காக்கள் இன்று மீண்டும் திறக்கப்படுவதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம் இம்மாதம் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக மாநகராட்சி ஆணையர் திரு. குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னையில் மெட்ரோ ரயில்களில் நவம்பர் மாததத்தில் 83 லட்சத்து 61 ஆயிரம் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் கூறியுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

குவஹாத்தியில் நடைபெறும் இப்போட்டியில் இந்தியா, சீனா. ஜப்பான், சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் மாளவிகா பன்சோட், சதீஷ் கருணாகரன், அஸ்வினி பொன்னப்பா உள்ளிட்ட முன்னணி வீரர், வீராங்கனைகள் இதில் பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>